DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
---
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, YERCAUD
DATE : 19.02.2026

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No.84/2022 |
| Deposition of Witness for Prosecution | : | PW.9 |
| Name | : | **குமார் செல்வம்** |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | xxxx |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Deposition of witness for prosecution side solemnly affirmed by Tr. P.Maruthachalam, Junior Assistant, of this court, on 19.02.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

**(1–எதிரி ஆஜர்)**
**(2 மற்றும் 3 எதிரிகள் ஆஜரில்லை). (2 மற்றும் 3 எதிரிகளுக்காக பிரிவு 355 of BNSS Act–ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டது).**
**<u>விசாரணை தொடங்கப்பட்ட நேரம்(12.31.P.M):–</u>**

**<u>முதல் விசாரணை:–</u>**

நான் தற்போது சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டம், ஏற்காடு அரசு மருத்துவமனையில் முதுநிலை உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகின்றேன். நான் 27.05.2022–ம் தேதியன்று பணியில் இருந்தபோது இரவு 10.00 மணியளவில் ஏற்காடு லேடீஸ் சீட் பகுதியை சேர்ந்த அகஸ்டீன் என்பவரின் மகன் பிரேம் தீப் சிங், தன் மனைவி வந்தனா மற்றும் சந்தோஷ் என்பவருடன் சிகிச்சைக்கு வந்தார். அவர் தன்னை அடையாளம் தெரிந்த மூன்று நபர்கள் அன்றைய தினம் இரவு 09.30 மணியளவில் அவர் வீட்டின் அருகே கைகள், கல் மற்றும் சாவியை கொண்டு தாக்கியதாக கூறினார்.

அவரை பரிசோதனை செய்தததில் கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன காயம் 1 சிராய்பு காயம் வயிற்றுபகுதியில் காணப்பட்டன. காயம் 2

வீக்க காயம் வலது புற சுண்டு விரல் 1x1 CM அளவிலும், காயம் 3 மற்றும் 4 முதுகு வலி மற்றும் கால் வலியிருப்பதாக கூறினார். அவரை புற நோயாளியாக சிகிச்சை அளித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்ப காயங்கள் என்று விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அளித்தேன். **விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

சந்தோஷ் என்பவருக்கு அதே தினத்தன்று அடையாளம் தெரிந்த மூன்று நபர்கள் கல், கட்டை மற்றும் சாவியை கொண்டு தாக்கியதாக கூறினார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் காயம் 1 சிராய்பு காயம் வலது புற நடுவிரல் 1x1 CM அளவிலும், காயம் 2 வீக்க காயம் 2x2 CM நெஞ்சு பகுதியிலும், காயம் 3 சிராய்ப்பு காயம் இடது புற முன்னங்களையிலும் 1x1 CM என்று அவரை புற நோயாளியாக சிகிச்சை அளித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்ப காயங்கள் என்று விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அளித்தேன். **விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

பிரேம் தீப் சிங் மனைவி வந்தனா அதே தினத்தன்று அடையாளம் தெரிந்த மூன்று நபர்கள் கல் கொண்டு தாக்கியதாக கூறினார்.அவருக்கு ஏற்பட்ட காயங்கள் வீக்க காயம் 1x1 CM இடது புற முன்னங்கையிலும், காயம் 2 முதுகு வலியிருப்பதாக கூறினார். அவரை புற நோயாளியாக சிகிச்சை அளித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்ப காயங்கள் என்று விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அளித்தேன். **விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

1. எந்த தேதியன்று முதல் விசாரணையில் குறிப்பிட்ட நபர்கள் சிகிச்சைக்கு வந்தார்கள் என்றால் 27.05.2022-ம் தேதி இரவு 10.00 மணியளவில் பிரேம் தீப் சிங்கும், 10.05 மணிக்கு சந்தோஷ் என்பவரும், 10.10 மணிக்கு வந்தனா என்பவரும் வந்ததாக விபத்து பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஒரு கனமான பொருளின் மீது உராயும் போதோ தவறி கீழே விழும்போதோ சிராய்ப்பு காயம் ஏற்பட வாய்புள்ளது என்றால் சரிதான். வாகன

விபத்தில் மற்றொரு பொருளுடன் மோதும் போது இரத்தக்கட்டு ஏற்பட வாய்புள்ளது என்றால் சரிதான். பிரேம் தீப் சிங் வயிற்றில் சிராய்பு காயம் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். கூர்மையான கம்பி, கத்தி கொண்டு வயிற்றில் குத்தினால் சிராய்பு காயம் ஏற்பட வாய்ப்பில்லை என்றால் சரிதான்.

2. பிரேம் தீப் சிங், வந்தனா, சந்தோஷ் ஆகியோர் உள்நோயாளியாக சிகிச்சை பெறவில்லை என்றால் சரிதான். தன்னை யார் தாக்கினார்கள் என்று பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வாகன விபத்தின் போது முதல் விசாரணையில் சொல்லிய காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

**(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)**

**(விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 12.44.P.M)**

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

R ELANCHEZHIAN

Digitally signed by R ELANCHEZHIAN
Date: 2026.02.19 12:48:03 +0530

District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.